# இயேசுவே என் இறைவா

இயேசுவே என் இறைவா
உனது பாதம் தேடினேன்
திருவடியில் தலை சாய்த்து
எனது கண்கள் மூடினேன்
மௌனமாகப் பாடினேன்

**1**
பழகிப் புரிந்த உயிர்கள் பல
விலகிப் பிரிந்து போயின
நிலவு போல ஒளிர்ந்த முகங்கள்
நினைவுகளாய் ஆயின (2)
நீலவானம் போல என்றும்
நிலைக்கும் அன்பு உறவு தான் (2)
அன்றும் இன்றும் ஒன்று போல
என்னை ஏற்றுக் கொள்கிறாய்
என்னை அன்பு செய்கிறாய்

**2**
அழுது ஓய்ந்த மனதை உந்தன்
அன்பைச் சொல்லித் தேற்றுவேன்
மெழுகு போன்ற மனதில் என்றும்
உறுதி வேண்டிப் பாடுவேன் (2)
பொழுது சாயும் வேளை வர
உனது தீபம் ஏற்றுவேன் (2)
பழுது குறைவு எதுவுமில்லா
உனது அன்பில் மகிழுவேன்
உனது நாமம் புகழுவேன்